

துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்க செல்லும் வழியில், நாமக்கல் மாவட்டம், புதன் சந்தை அருகே கழக உடன்பிறப்புகள் – இளைஞரணியினர்– மகளிர் – பொதுமக்கள் உள்ளிட்டோர் திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர்.

### திரு.வி.க. நகர் தொகுதியில்

## கழக முப்பெரும் விழா - பவள விழா பொதுக்கூட்டம்!

### திருச்சி சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார்!

சென்னை, அக். 22 –

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதியில் பவள விழா ஆண்டு முப்பெரும் விழா பொதுக்கூட்டம் 19.10.2024 அன்று பாஷ்யம் தெரு ஓட்டேரியில் நடைபெற்றது.

இந்த பொதுகூட்டத்திற்கு கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி தலைமையில் மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் திருச்சி என்.சிவா எம்.பி. கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா, கழகச் செய்தி தொடர் இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும் இந்நிகழ்ச்சிக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மேயர் பிரியா ராஜன் செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, சரிதா மகேஷ் குமார், சட் ஆசாத், புனிதவது எத்திராசன், டி. லோகேஷ் ந.துலுக்கானம் லயன் பி.துளசிங்கம், எம்.பெரோஸ்கான், பெரம்பூர் ஆர்.ராஜன், பெரம்பூர் ஆர்.மகேஷ், கா.ராஜ், முகமது, இரா.வீரமணி, தில்லை கதிரவன், புல்லட் கி.ரமேஷ், அ.புவனவதி கினார் ஆறுமுகம் வரவேற்புரையில்,

ஜி.கிருஷ்ணகுமார், எஸ். புஷ்பராஜ், எம்.சரவணன் எம்.சி., ச.அம்பத்வளவன் எம்.சி., ரமணி லோகேஷ் எம்.சி., தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி., பரிமளா சுரேஷ், மாருத்ரமூர்த்தி, அபோய், டீக்கா, தமீம் , பொல்லு டி.சுரேஷ் குமார், வி.கே.வெங்கடேசன், வெங்கடேசன், சசிகுமார், அ.கோவிந்தன், த.கருணாநிதி, பி.சுகுமார் வனஜா சண்முகம், அ.கருணாநிதி,

எல்.பாண்டுரங்கன், கனல் கங்கா, இ.ஜோசுவா, பா.ஜலபூஷணம், எஸ்.காதர்மீரான், கே.லட்சுமிஜி, சூர்யகுமார், எப்.செபஸ்டின் எஸ்.கே.சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மாவட்டப் பிரதிநிதிகள் வ.நாமதேவன், ஆர்.ராஜராஜன் நன்றியுரையாற்றினர்.

### அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு:

## முதல்வருக்கு - தமிழ்நாடு பொது நூலகத் துறை அலுவலர் சங்கம் நன்றி!

### நிறுவனத் தலைவர் எம்.ஜி.செல்வம் அறிக்கை!

சென்னை,அக். 22 –

அரசு ஊழிர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி என்று தமிழ்நாடு பொது நூலகத் துறை அலுவலர் சங்க நிறுவனத் தலைவர் எம்.ஜி.செல்வம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எம்.ஜி.செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசு எப்பொழுதெல்லாம் அகவிலைப்படியினை உயர்த்தி வழங்குகிறதோ, அப்பொழுதெல்லாம் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படியினை தொடர்ந்து உயர்த்தி வழங்கியவர் முன்னாள் முதலமைச்சர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்றளவும் அவரின் நினைவு கூர்ந்து நன்றி செலுத்தி வருகின்றோம்.

கடந்த அ.தி.மு.க .ஆட்சி காலத்தில் கொரானாவை காரணம் காட்டி, அரசு ஊழியர்களின் அகவிலைப்படியினையும், சலுகைகளையும் வழங்க மறுத்து முடக்கப்பட்டன. அரசு ஊழியர்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகினர்.

திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், முதல்வராகப் பொறுப்பேற்ற காலத்தில் கொரானா, மற்றும் அரசுக்கு கடுமையான நிதி நெருக்கடி இருந்தது. இந்நிலையில் நுண்மான் நுழைபுலத்தால் நிதி நெருக்கடியை படிப்படியாக சீராக்கி அரசு ஊழியர்கள் எதிர்பார்க்காத நிலையில் 14 சதவீத அகவிலைப்படியினை உயர்த்தி வழங்கி, அரசு ஊழியர்களையும், ஓய்வூதியர்களையும் மகிழ்ச்சி மழையில் நனைய விட்டு மனம் குளிர வைத்தவர். ஒன்றிய அரசு அகவிலைப்படியினை உயர்த்தி வழங்கும் காலங்களில், மாநில அரசு ஊழியர்களுக்கும் அகவிலைபடியினை உயர்த்தி வழங்கி வருகிறார்.

தீபாவளி திருநாளில் அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்களின் இல்லங்களில் தீப ஒளி பரவட்டும். மகிழ்ச்சி நிறையட்டும் எனும் நல்லெண்ணத்துடன் 3 சதவீதம் அகவிலைப்படியினை முன் தேதியிட்டு ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் உயர்த்தி அறிவித்துள்ளார். இரட்டிப்பு மகிழ்ச்சியாக அக்டோபர் மாத ஊதியத்தையும் முன் கூட்டியே வழங்கி கலைஞர் அவர்களின் மறு உருவமாக விளங்குகிறார். திராவிட மாடல் ஆட்சி அரசு ஊழியர்களின் அட்சயப் பாத்திரம் என்றால் மிகையல்ல.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலம், நூலகம் மற்றும் நூலகர்களுக்கு பொற்காலம். எனவே ஊர்ப்புற நூலகர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிடவும், ஊர்ப்புற நூலகங்களை கிளை நூலகங்களாக தரம் உயர்த்திடவும் உரிமையோடும், உள்ளன்போடும் பணிவுடன் வேண்டுகிறோம்.

அகவிலைப்படியினையும், ஊதியத்தையும் முன் தேதியிட்டு வழங்கிய திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர் சங்கம் சார்பில் இதயங்கனிந்த, நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு எம்.ஜி.செல்வம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.






வாய்மையே வெல்லும்

நாமக்கல் மாவட்டம்

அரசு நலத்திட்ட உதவிகள்

வழங்கும் விழா

140 புதிய திட்டப் பணிகள் ரூ. 366 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டுதல்

134 நிறைவுற்ற திட்டப் பணிகள் ரூ. 298 கோடி மதிப்பீட்டில் திறந்து வைத்தல்

16,000 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

ரூ.664 கோடி மதிப்பீட்டிலான

புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,

நிறைவுற்ற திட்டப் பணிகளைத் திறந்துவைத்து,

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றுவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பிப்பார்கள்.



அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல்




ஆவின் நிர்வாக அலுவலகம், நாமக்கல்



கருங்கல்-மேட்டுப்பட்டி சாலையில் திருமணி முத்தாற்றின் குறுக்கே புதிய பாலம்



டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம், நாமக்கல்

செ.ம.தொ.இ./1065/வரைகலை/2024

ரூ.114 கோடி மதிப்பீட்டில்
அரசு சட்டக்கல்லூரி, விடுதி, பள்ளிக் கட்டடங்கள்

ரூ.89 கோடி மதிப்பீட்டில்
புதிய நவீன பால்பதன ஆலை

ரூ.52 கோடி மதிப்பீட்டில்
3 பாலங்கள், 96 கட்டடப் பணிகள், இணைப்புச் சாலை

ரூ.19.50 கோடி மதிப்பீட்டில்
டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்

நாள் : 22.10.2024, செவ்வாய்க்கிழமை, மாலை 3.30 மணி, இடம் : பொம்மைகுட்டைமேடு, நாமக்கல்

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

நா. முருகானந்தம்,இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009